வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

நாள் 29.03.2024 வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

புதுச்சேரியில் அடுத்த மாதம் 19ஆம் தேதியன்று நடைபெறவுள்ள மக்களவை தேர்தலையொட்டி, புதுச்சேரி மாவட்ட தேர்தல் அலுவலகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மக்களவை தேர்தலுக்கு அடுத்த மாதம் 26ஆம் தேதி நடைபெற உள்ள 2ஆம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது.

செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்ப பயன்பாடுகள் குறித்த தெளிவான நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

இந்தியா வந்துள்ள, உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு.டிமிட்ரோ குலேபா-வை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இன்று புதுடெல்லியில் சந்தித்துப் பேசினார்.

புதுச்சேரி தேர்தல் 1 (19)

புதுச்சேரியில் அடுத்த மாதம் 19ஆம் தேதியன்று நடைபெறவுள்ள மக்களவை தேர்தலையொட்டி, இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, புதுச்சேரி மாவட்ட தேர்தல் அலுவலகம் பல்வேறு

நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் 967 வாக்குச்சாவடிகள் அமைக்கப் பட்டுள்ளன என்றும், மொத்தம் 10 லட்சத்து 23 ஆயிரத்து 699 வாக்காளர்கள் உள்ளனர் என்றும், தேர்தல் நடத்தும் அதிகாரி திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளார். இதில் ஆண் வாக்காளர்கள் 4 லட்சத்து 80 ஆயிரத்து 569. பெண் வாக்காளர்கள் 5 லட்சத்து 42 ஆயிரத்து 979. மூன்றாம் பாலினத்தவர் 151 பேர் உள்ளனர். 18 வயதுக்கு மேற்பட்ட, முதன்முறை வாக்காளர்கள் 28ஆயிரத்து 921 பேர் உள்ளனர்.

மொத்த வாக்காளர்களில் 85 வயதுக்கும் மேற்பட்ட 1,609 வாக்காளர்கள் மற்றும் 1,322 மாற்றுத்திறனாளிகள் தங்கள் இல்லத்திற்கு வந்து வாக்கினை பதிவு செய்ய வேண்டி விண்ணப்பித்துள்ளனர். தேர்தல் நடத்தை நெறிமுறைகள் கடைபிடிக்கப்படுவதை கண்காணிக்கவும், விதிமீறல்களைத் தடுக்கவும் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொகுதி வாரியாக 24 மணிநேரமும் இயங்கும் பறக்கும்படை மற்றும் எல்லைகளில் சோதனைச் சாவடிகள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்களை 1950 மற்றும் சி-விஜில்

புதுச்சேரி தேர்தல் 2 (12)

செயலி மூலம் தங்கள் புகார்கள் மற்றும் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தேர்தல் நடத்தும் அதிகாரி திரு. குலோத்துங்கன் அறிவித்துள்ளார். மேலும், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் நடத்தும் தேர்தல் தொடர்பான கூட்டங்கள் மற்றும் ஊர்வலம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு, உரிய அனுமதி பெற வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதற்கான அனுமதிகளைப் பெற சாரத்தில் அமைந்துள்ள,

திட்டம் மற்றும் ஆராய்ச்சித்துறை அலுவலகத்தை அணுகலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். புதுச்சேரி மக்களவை தொகுதியில் 100 சதவிகித வாக்களிப்பை உறுதி செய்யும் நோக்கில் இராணுவ வீரர்கள் தபால் வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்கவும், தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் வாக்குப்பதிவு செய்ய, தேர்தல் பணி சான்று வழங்கவும், உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

**தமிழகம் தேர்தல் (15)**

தமிழகத்தில் தேர்தல் களம் தீவிரமடைந்து வரும் நிலையில் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் முனைப்புடன் நடைபெற்று வருகிறது. திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலின், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகத்திலும், பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை, காஞ்சீபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரிலும், தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கின்றனர். காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, திரு. ராகுல் காந்தி ஆகியோர், அடுத்த வாரம் தமிழகத்தில் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 39 மக்களவை தொகுதிகள் உட்பட நாடு முழுவதும் 17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களில் 102 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 19ஆம் தேதி நடைபெறும் முதற்கட்ட வாக்குப்பதிவிற்கு, தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களை திரும்ப பெறுவதற்கு, நாளை கடைசி நாளாகும். இறுதி வேட்பாளர் பட்டியல் நாளை வெளியிடப்படும்.

சி-விஜில் (13)

தேர்தல் ஆணையத்தின் சி-விஜில் செயலி அறிவிக்கப்பட்டதிலிருந்து இதுவரை 79 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேர்தல் விதி மீறல் புகார்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. சுதந்திரமான, நியாயமான மற்றும் தூண்டுதல் இல்லாத தேர்தல்களை உறுதி செய்வதற்கான, டிஜிட்டல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக சி-விஜில் செயல்பட்டு வருகின்றது. சட்டவிரோத விளம்பரப் பலகைகள் மற்றும் பேனர்கள் தொடர்பான புகார்கள், பணம், அன்பளிப்பு மற்றும் மதுபான விநியோகம் குறித்த புகார்கள், துப்பாக்கிகளை காட்சிப்படுத்தியமை மற்றும் அச்சுறுத்தல் தொடர்பான புகார்கள், அனுமதிக்கப்பட்ட நேரத்தை தாண்டி ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்திய புகார்கள் உட்பட பல்வேறு தேர்தல் விதிமீறல்கள் இந்த சி-விஜில் செயலி மூலம் பதிவாகியுள்ளதாக ஆணையம் தெரிவித்துள்ளது.

2ஆம் கட்ட வாக்குப்பதிவு (10)

மக்களவைக்கு ஏப்ரல் 26ஆம் தேதி நடைபெற உள்ள 2ஆம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது. கேரளா, கர்நாடகா, ராஜஸ்தான் உட்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள, 88 மக்களவைத் தொகுதிகளுக்கு நடைபெறவுள்ள வாக்குப்பதிவிற்கான வேட்புமனு தாக்கல் செய்ய, வரும் 4ஆம் தேதி கடைசி நாள் ஆகும்.

**பிரதமர் (11)**

செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்ப பயன்பாடுகள் குறித்த தெளிவான நெறிமுறைகள் வகுக்கப்பட்டால், விவசாயம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைகளில் தொழில்நுட்பங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவது தவிர்க்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். இன்று புதுடெல்லியில் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தில் முன்னாள் தலைவர் திரு. பில்கேட்சுடன் கலந்துரையாடிய அவர், புத்தாக்க முயற்சிகளை, தொழில்நுட்பங்கள் ஊக்குவிக்க முடியும் என்றும், நாட்டிலுள்ள பெண்கள் புதிய தொழில்நுட்பங்களை பெரிதும் வரவேற்பதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார். மேலும், பிரதமர் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்கள் குறித்தும், திரு. பில்கேட்சுடன் கலந்துரையாடினார்.

**ஜெய்சங்கர் – உக்ரைன் (11)**

2 நாள் அரசுமுறை பயணமாக நேற்று இந்தியா வந்துள்ள, உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. டிமிட்ரோ குலேபா-வை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இன்று புதுடெல்லியில் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின்போது இருநாட்டு அமைச்சர்களும், ரஷ்யா-உக்ரைன் நிலவரங்கள் மற்றும் அதன் விளைவுகள் குறித்து கலந்துரையாடினர். மேலும், உலகளாவிய பிரச்சனைகள், இருதரப்பு கூட்டாண்மை மற்றும் ஒத்துழைப்பு குறித்தும் அவர்கள் விவாதித்தனர். கூட்டத்தின் தொடக்க அறிக்கையில், உக்ரைன் வெளியுறவு அமைச்சரின் இந்திய வருகை, உக்ரைனின் நிலைமையைப் புரிந்துகொள்ள வாய்ப்பளித்து

உள்ளதாகவும், இருதரப்பு உறவுகளில் ஒரு உத்வேகத்தை உருவாக்கி உள்ளதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

## புனித வெள்ளி (12)

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதைக் குறிக்கும் புனித வெள்ளி இன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாளில் இயேசு கிறிஸ்து மக்கள் அனைவரின் மீதும், அன்பு செலுத்தியும், மனித குலத்தின் பாவங்களுக்காக துன்பப்பட்டும், தனது உயிரைத் தியாகம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

புனித வெள்ளியை முன்னிட்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது சமூக வலைதளத்தில், இயேசு கிறிஸ்துவின் தியாகத்தை நினைவுகூர்ந்துள்ளார். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதற்கு முன்பு, கடைசியாக உணவு அருந்தியதைக் குறிப்பிடும் புனித வியாழக்கிழமையை முன்னிட்டு, பேராலயங்களில் சிறப்பு திருப்பலி நடைபெற்றது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த, ஈஸ்டர் திருநாள் வரும் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட உள்ளது.

## விழிப்புணர்வு வாசகம் 1 (18)

புதுச்சேரி தலைமைத் தேர்தல் அலுவலர் அலுவலகமும், புதுச்சேரி அகில இந்திய வானொலி நிலையத்தின் மண்டல செய்திப் பிரிவும் இணைந்து, புதுச்சேரி மக்களவைத் தொகுதி வாக்காளர்களுக்கான, தேர்தல் விழிப்புணர்வு தமிழ் வாசகம் எழுதுதல் போட்டியை அறிவித்துள்ளன.

முறையான வாக்காளர் கல்வி, மற்றும் தேர்தல் பங்கேற்பிற்கான SVEEP இயக்கத்தின் கீழ் இப்போட்டி நடத்தப்படுகிறது.

வாக்காளர் கடமைகள், 100 சதவிகித வாக்களிப்பு, நேர்மையான தேர்தல், தேர்தல் ஆணையத்தின் மொபைல் செயலிகள், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் தேர்தலின் பங்கு, வாக்குச் சாவடி வசதிகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85 வயதுக்கு மேற்பட்டோர் வீட்டிலிருந்தே வாக்களிக்கும் வசதி போன்ற கருத்துக்களை மையப்படுத்தி, தமிழில் விழிப்புணர்வு வாசகங்களை, வாக்காளர்கள் இப்போட்டிக்கு அனுப்பி வைக்கலாம். எதுகை – மோனை - சந்தம் போன்ற அம்சங்களுடன், ஓசை நயத்துடனும், புதியதாகவும், புதுமையானதாகவும் வாசகங்கள் இருக்க வேண்டும்.

வாக்காளர்கள் தங்களின் பெயர், முகவரி, மற்றும் மொபைல் எண்ணுடன், அதிகபட்சம் 5 விழிப்புணர்வு வாசகங்களை, 94 43 30 83 76 என்ற வாட்ஸ் அப் எண்ணிற்கு, வரும் ஏப்ரல் 3ஆம் தேதி மாலை 5 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். சிறந்ததாக தேர்ந்தெடுக்கப்படும்

விழிப்புணர்வு வாசகம் 2 (5)

வாசகங்களுக்கு, முதல் பரிசாக ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபாய், 2ஆம் பரிசாக இருவருக்கு தலா 2 ஆயிரம் ரூபாய், மற்றும் 3ஆம் பரிசாக மூவருக்கு தலா ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்படும் வாசகங்கள், வாக்காளர் விழிப்புணர்வுக்காக அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பப்படும்.

ஜம்மு சாலை விபத்து (17)

ஜம்மு-காஷ்மீரின் ராம்பன் சாலையில் இன்று அதிகாலையில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்துள்ள 10 பேரின் குடும்பத்தினருக்கு, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு மற்றும்  பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

-பிரதமர் திரு. நரேந்திர மோடி, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் நிவாரணமாக, பிரதமரின் தேசிய  நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார். மேலும், இந்த சாலை விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய, தாம் இறைவனை வேண்டுவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து குறித்து, ஜம்மு-காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு.மனோஜ் சின்ஹாவும், தமது ஆழ்ந்த இரங்கலையும், அதிர்ச்சியையும் தெரிவித்துள்ளார். ராம்பன் சாலை விபத்தில்,  உயிரிழந்தவர்கள் குறித்து, தாம் அதிர்ச்சியடைந்து உள்ளதாகவும், பாதிக்கப் பட்டவர்களின் உறவினர்களுக்கு, அனைத்து உதவிகளையும் வழங்குமாறு மாவட்ட நிர்வாகம் மற்றும் ஆணையத்திற்கு, அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் திரு.மனோஜ் சின்ஹா செய்தியாளர்களிடம்  தெரிவித்துள்ளார்.

கோதுமை (15)

நாட்டில், கோதுமையின் கையிருப்பு நிலையை, கட்டாயமாக அறிவிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. அனைத்து மாநிலங்கள் மற்றும்

யூனியன் பிரதேசங்களில் உள்ள மொத்தம் மற்றும் சில்லரை விற்பனையாளர்கள், பதப்படுத்துபவர்கள் உள்ளிட்ட வர்த்தகர்கள், எப்ரல் 1ஆம் தேதி முதல், மறு உத்தரவு வரும் வரை, தங்கள் கோதுமை கையிருப்பு நிலையை அறிவிக்க வேண்டும் என்று நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் இன்று உத்தரவிட்டுள்ளது. ஒட்டுமொத்த உணவு பாதுகாப்பை நிர்வகிப்பதற்கும், பதுக்கல் மற்றும் நேர்மையற்ற வர்த்தகங்களை தடுப்பதற்கும், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. அமைச்சகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள போர்ட்டலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், அரிசி மற்றும் கோதுமை கையிருப்பை வர்த்தகர்கள் வெளியிடத் தொடங்க வேண்டும் என்றும், இதன் மூலம் கோதுமை மற்றும் அரிசி விலையைக் கட்டுப்படுத்தவும், மக்களுக்கு அவை எளிதாக கிடைப்பதை உறுதி செய்யவும் அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

புதுச்சேரியில் அடுத்த மாதம் 19ஆம் தேதியன்று நடைபெறவுள்ள மக்களவை தேர்தலையொட்டி, புதுச்சேரி மாவட்ட தேர்தல் அலுவலகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மக்களவைக்கு ஏப்ரல் 26ஆம் தேதி நடைபெற உள்ள 2ஆம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது.

செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்ப பயன்பாடுகள் குறித்த தெளிவான நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

இந்தியா வந்துள்ள, உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு.டிமிட்ரோ குலேபா-வை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இன்று புதுடெல்லியில் சந்தித்துப் பேசினார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. AV/SM/VM**